வானவில்

VAANAVIL
ISSUE – 28 APRIL 2013

இதழ் - 28 சித்திரை 2013

# இனவாத மதவாத சக்திகளை தயவு தாட்சண்யமின்றி ஒடுக்க வேண்டும்!

புலிகளுடனான போர் முடிவுற்று 4 வருடங்கள் ஆகிவிட்ட போதிலும், நாட்டில் பூரணமான தேசிய நல்லிணக்கமோ, ஜனநாயகமோ, சமாதானமோ ஏற்படாத ஒரு சூழலே நிலவுகின்றது. அத்துடன் தெற்கிலும் வடக்கிலும் சில நாசகார சக்திகள் இனவாதத்தையும் மதவாதத்தையும் கிளறி, தமது தீய நோக்கங்களை நிறைவேற்றவும் முயன்று வருகின்றன.



நாட்டில் தற்போது எழுந்துள்ள நிலைமைகளுக்கு அரசாங்கம் எதிர்க்கட்சிகள் மற்றும் வெளிநாட்டு சக்திகள் மீது குற்றம்சாட்டி வருகையில், மறுபக்கத்தில் அரசாங்கமே இதற்குக் காரணம் என, எதிரணிக் கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

போர்க் காலத்திலும், அதன் பின்னரான சிறிது காலமும் சற்று பின்வாங்கியிருந்த தமிழ் பிரிவினைவாத பிற்போக்கு சக்திகள், அரசாங்கம் தமக்கு எதிரான தீவிரமான நடவடிக்கை எதனையும் எடுக்காது என்று கண்ட தைரியத்தில், மீண்டும் தமது அசிங்கமான தலையைப் படிப்படியாகத் தூக்கி, இப்பொழுது முழு அளவிலான தேசத் துரோகச் செயலுக்குத் தயாராகிவிட்டார்கள்.

இவர்களது இந்தச் செயலுக்கு புலிகளின் அழிவால் இலங்கையில் தமது திட்டங்கள் தவிடுபொடியானதைக் கண்டு ஆத்திரமுற்ற சில வெளிநாட்டுச் சக்திகளும், அவர்களுடன் ஒன்றிணைந்து செயல்படும் புலம்பெயர் புலி ஆதரவாளர்களும், தமிழகத்திலுள்ள தமிழ் பிரிவினைவாத சக்திகளும், ஏகாதிபத்தியத்துக்குச் சார்பான ஐக்கிய தேசியக் கட்சியும் கைகொடுத்து வருகின்றன. இன்று அவர்களது நாட்டுக்கு எதிரான செயல்பாடு, ஒன்றிணைந்த முழு அளவிலான வடிவத்தை எட்டியுள்ளது.

இது இலங்கையில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமைக்கு ஒரு பிரதான காரணம். ஆனால் இந்த நிலைமை ஏற்படுவதற்கு இதே அளவு இல்லாமலில்லாவிட்டாலும், இன்னொரு முக்கியமான காரணமும் அரசாங்கத் தரப்பில் இருக்கிறது.

அதாவது இன்றைய அரசாங்கமும், இதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் முன்னைய அரசாங்கமும், இனப் பிரச்சினை தீர்வு சம்பந்தமாக உருப்படியான தீர்வு எதனையும் காண முன்வராததும், இன்றைய நிலைமையைத் தோற்றுவிப்பதில் ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது என்பதை எவரும் மறுத்திவிட முடியாது.

ராஜபக்ஸ முதன்முதலில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பொழுது, புலிகளை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். ஆனால் புலிகள் அவரது அழைப்பை ஊதாசீனம் செய்து யுத்தத்தைத் தேர்ந்தெடுத்தனர். அதற்குக் காரணம் இருந்தது. ஜனாதிபதித் தேர்தல் நடந்த பொழுது தமிழ் மக்களை வாக்களிக்கவிடாது புலிகள் தடுத்திருந்தனர். ஏனெனில் தமிழ் மக்களை வாக்களிக்கவிட்டால், அவர்கள் தமிழ் தலைமைகள் ஆண்டாண்டு காலமா ஏற்படுத்திய பழக்க தோசம் காரணமாக, ஐ.தே.க வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்து, அவரை ஜனாதிபதி ஆக்கிவிடுவார்கள். அதன் பின்னர் ரணில் தனது எஜமானர்களான அமெரிக்கா, பிரித்தானியா என்பனவற்றின் உதவியுடன் தம்மைக் கொடூரமாக ஒடுக்கிவிடுவார் என புலிகள் அஞ்சினர்.

அவர்களது கணிப்பில் ராஜபக்ஸ ஜனாதிபதியாகத் தெரிவானால், மேற்கத்தைய நாடுகளின் விரோதியான அவர்,

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க….

**நூறு சிந்தனை மலரட்டும்**

# வட மாகாணசபைத் தேர்தல்

வட மாகாணசபைத் தேர்தலை இவ்வருட (2013) செப்ரெம்பர் மாதத்தில் நடாத்துவது என அரசாங்கம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அறிவித்துவிட்டது. அரசாங்கத்தின் இந்த முடிவு நடைமுறைப்படுத்தப்படுமா என்ற சந்தேகங்கள் சில தமிழர் தரப்புகளால் கிளப்பப்படுகிறது. அதேபோல வடமாகாணசபைத் தேர்தலை நடாத்தக்கூடாது என்ற வேண்டுகோளும் (மிரட்டலும்கூட) சில சிங்களத் தரப்புகளால் விடுக்கப்படுகிறது. அரசாங்கம் விரும்பியோ அல்லது சில நிர்ப்பந்தங்கள் காரணமாகவோ, வட மாகாணசபைத் தேர்தலை நடாத்துவது என எடுத்த முடிவு, ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி மட்டுமின்றி, தமிழ் மக்களின் அபிலாசைக்குக் கிடைத்த ஒரு சிறிய ஆசுவாசமுமாகும்.

ஏனெனில் மற்றைய 8 மாகாணசபைகளுக்கும் உரிய முறையில் தேர்தல் நடாத்தப்பட்டு இயங்குகின்ற போதிலும், வட மாகாணசபை மட்டும் 1990இல் புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி அப்போதைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவினால் கலைக்கப்பட்ட பின்னர், இன்று வரை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படாமல் இருந்து வருகிறது.

அன்று தனக்குத்தானே குழி தோண்டுவது போல புலிகள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட, வடக்கும் கிழக்கும் இணைந்த, வட கிழக்கு மாகாணசபையை தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மிக மோசமான சிங்கள இனவாத ஜனாதிபதி ஒருவரால் கலைக்க வைத்த வரலாற்றுத் துரோகத்தின் தொடர்ச்சியாகப் பின்னர், வேறு சில சிங்கள இனவாத சக்திகள் கிளப்பிய சட்டப் பிரச்சினை காரணமாக வடக்கும் கிழக்கும் நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டும் விட்டது.

எந்தவிதமான பொது நலனும், தீர்க்கதரிசனமும் இன்றித் தமிழர் தரப்பால் அன்று எடுத்த தவறான இந்த முடிவால், இன்று பிரிக்கப்பட்ட வட மாகாணசபைக்காவது தேர்தல் நடாத்தும்படி அரசாங்கத்திடம் மன்றாட வேண்டிய நிலைக்குத் தமிழர் தரப்பு தள்ளப்பட்டதிலிருந்தே, தமிழ் தலைமைகள் காலத்துக்குக் காலம் செய்து வரும் முட்டாள்தனமான காரியங்களைப் புரிந்து கொள்ளலாம்.

மறுபக்கத்தில் அரசாங்கத்தில் உள்ள சில சிங்கள இனவாதக் கட்சிகள் வட மாகாணசபைத் தேர்தல் நடந்தால், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கைகளுக்கு அதிகாரம் போய், மீண்டும் தமிழ் பிரிவினைவாதம் தலைதூக்கிவிடும் என அச்சம் தெரிவிக்கின்றனர். அத்துடன் அப்படி நடந்தால், அது இலங்கை இராணுவம் பிரிவினைக்கு எதிராகவும், நாட்டைப் பாதுகாப்பதற்காகவும் இரத்தம் சிந்திச் செய்த தியாகங்களுக்குத் துரோகமாகிவிடும் என்றும் வாதிடுகின்றனர். இந்தக் கருத்து அர்த்தமற்ற முட்டாள்தனமான வாதமாகும்.

இலங்கை அரசாங்கமும், மக்களும், இராணுவமும் 30 வருடங்களாகப் போராடியது புலிகளின் பயங்கரவாத, பிரிவினைவாத செயல்பாட்டுக்கு எதிராகவேயொழிய, மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்டுவதற்காக அல்ல. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படாததால்தான், போராட்டம் ஆரம்பமாகி, அது பின்னர் புலிகளால் பயங்கரவாத, பிரிவினைவாத போக்காக மாற்றப்பட்டது. எனவே போராட்டம் ஆரம்பமானதற்கான காரணம் உரிமை மறுப்பும், ஜனநாயக மறுப்பும் என்பது வெள்ளிடை மலை. எனவே அதை நிவர்த்தி செய்வதற்கான வழி முறைகளில் ஒன்றாக, ஏனைய 8 மாகாணசபைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாகாணசபை முறைமையை, வட மாகாணத்தில் நடைமுறைப்படுத்தினால் மட்டும் பிரிவினைவாதம் வலுத்துவிடுமா?

வட மாகாணசபைத் தேர்தலில் படு பிற்போக்கான, பிரிவினைவாத எண்ணத்தை இன்னமும் கைவிடாத தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற விடாது, முற்போக்கு சக்திகளின் கைகளில் அதன் நிர்வாகத்தை வென்றெடுப்பது என்பது இன்னொரு விடயம். அது முற்றுமுழுதாக ஜனநாயக வழியில் செய்யப்பட வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பை அரசியல் ரீதியாக எதிர் கொள்வதற்குப் பதிலாக, தேர்தலை நடாத்தாமல் தவிர்ப்பது என்பது, 'சீப்பை ஒளித்து வைப்பதன் மூலம் கலியாணத்தை நிறுத்தலாம்' என முட்டாள்தனமாக நம்புவதற்குச் சமானமாகும்.

எனவே வட மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதன் மூலம் அங்கு பிரிவினைக்கு வழி ஏற்பட்டுவிடாது. மாறாக அந்தக் குறைந்த பட்ச உரிமையைக்கூட தமிழ் மக்களுக்கு மறுப்பதன் மூலம்தான், அவர்கள் மத்தியில் மீண்டும் பிரிவினைவாத சிந்தனைகள் தலை தூக்கும் என்பதை, பேரினவாத சக்திகள் புரிந்து கொள்வது அவசியம். *

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

---

'நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே, பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாகிறது!'

**—கார்ல் மார்க்ஸ்**

சீனா ஒரு தலைமுறைக்குள்ளாகவே மிகப்பெரிய விவசாய நாடு என்ற நிலையிலிருந்து பூகோளரீதியான உற்பத்தி மற்றும் வர்த்தகத்தின் சக்திவாய்ந்த ஒரு கேந்திரமாக மாறியுள்ளது. சீனாவின் பொருளாதாரம் இரண்டு தசாப்தத்துக்கு முன்னர் இருந்ததைவிட 20 மடங்கு அதிகரித்துள்ளதுடன், உலகின் மிகப்பெரிய பொருளாதார சக்தியான அமெரிக்காவைத் தாண்டிச் செல்லும் நிலையிலும் உள்ளது. ஆனால் சீனாவின் பேராசைத்தனமானதும் அதிகரித்து வருவதுமான சக்திவாய்ந்த இராணுவத்தின் வளர்ச்சிதான் திடுக்கிட வைக்கும் செய்தியாகும்.

நடந்த கடற்கொள்ளையர்களுக்கு எதிரான ரோந்து நடவடிக்கைகளின் போது இது நிகழ்ந்தது. ஆனால் அமெரிக்க மற்றும் சீன இராணுவங்கள் வெவ்வேறான நோக்கங்களுடன் அந்த இடத்தில் அதை முடித்துக் கொண்டன. அதன் விளைவாக உலகிலேயே சிறந்தஆயுத தயாரிப்புடன் கூடிய அந்த இரண்டு இராணுவங்களின் நிலையும் அப்படியே இருக்கின்றன.

அமெரிக்க அதிகாரிகள் சீன இராணுவத்துக்கு செலவிடப்படும் பணத்தின் தொகை பற்றி பெரிதாக அக்கறைப்படவில்லை. அந்த பணத்தினால் கொள்வனவு

# சீனாவின் இரகசியமான ஆயுதக் களஞ்சியத்தின் உட்பக்கம்!



10 வருடங்களுக்கு முன்னர் மக்கள் விடுதலை இராணுவத்தின் வரவு செலவுத் திட்டம் சுமார் 20 பில்லியன் டொலர்களாகும் ($20 Billion). இன்று அது 100 பில்லியன் டொலர்கள் ($100 Billion) வரை அதிகரித்துள்ளது. (சில ஆய்வாளர்கள் இது 160 பில்லியன் டொலர்களை நெருங்கியுள்ளதாகக் கருதுகிறார்கள்). மக்கள் விடுதலை இராணுவத்தின் வரவு செலவுத் திட்டம் அமெரிக்கா வருடாந்தம் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு ஒதுக்கும் தொகையில் ஆறில் ஒரு பங்கு ஆகும். ஆனால் வரப்போகும் ஆண்டுகளில் சீனா பாதுகாப்பு செலவீனங்களுக்கு ஒதுக்கும் தொகை அதிகரிக்க வாய்ப்புள்ளது. சீன இராணுவ செலவீனங்கள் அதன் பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் உள்ளது.

அதேநேரத்தில் சீன ஜனாதிபதி ஹு ஜின்ராவோ 21ஆம் நூற்றாண்டில் மக்கள் விடுதலை இராணுவம் “புதிய சரித்திர குறிக்கோள்”களை நிறைவேற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். அதாவது அது தேசத்தின் சுயாதிபத்தியத்தைப் பாதுகாப்பது என்ற பாரம்பரியமான நோக்கத்தைக் கொண்டிருப்பதுடன், உண்மையான உலக அதிசக்திமிக்க இராணுவ வலிமை என்ற நோக்கத்தையும் நிறைவேற்றுவதுமாகும். சில விடயங்களில் சீனாவின் அதிகரித்து வரும் சர்வதேசப் பிரசன்னம் அமெரிக்காவுடன் விஸ்தாரமான ஒத்துழைப்புக்கு இட்டுச் சென்றது. 2008இல் சோமாலியாவின் கரைகளில்

செய்யப்படும் தொழில்நுட்பம் பற்றியே அவர்கள் கவலைப்படுகின்றனர். அமெரிக்க இராணுவத்தின் கனரகத் தளபாடங்கள் எந்தவொரு போட்டியாளரையும் விட ஒரு தலைமுறை முன்னேற்றகரமானதாகவே இருக்கின்றன.

ஆனால் சீனர்கள் அந்த இடைவெளியைக் குறைக்க ஆரம்பித்திருக்கின்றனர். முன்னேற்றகரமான யுத்த விமானங்களைத் தயாரிப்பதில் சீனா அடைந்துள்ள வளர்ச்சி கவனத்தில் எடுக்கப்படுகின்றது. அண்மைக்காலம் வரை தமது F22 , F35 விமானங்களே உலகத்திலுள்ள ஒரேயொரு ஐந்தாவது தலைமுறை விமானங்கள் என அமெரிக்க அதிகாரிகள் எண்ணியிருந்தனர் (மேலே கூறப்பட்ட மறைந்து சென்று தாக்கும் ஜெட் விமானங்கள் கடந்த தசாப்தத்தில் உருவாக்கப்பட்டவை. அவை ரடார் திரையில் தென்படாதவை என்பதுடன், உயர் திறனுள்ள இயந்திரங்கள், இலத்திரனியல் கருவிகள், கணணி வலையமைப்புகள் என்பவற்றைக் கொண்டவையாகும்).

2011இல் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் றொபேர்ட் கேற்ஸ் (Robert Gates) சீனாவுக்கு ஒரு விஜயத்தை மேற்கொண்ட போது வேறு விடயமொன்றைக் கேள்விப்பட்டார். கேற்ஸ் தனது விருந்துபசரிப்பாளரான ஹு ஜின்ராவோவைச் சந்தித்த பொழுது, “ஒத்தநேரத்தில்” சீனாவின் முன்னேறிய புதிய சண்டை விமானமான J-20 செங்டு

(Chengdu) நகருக்கு மேலால் தனது முதலாவது பகிரங்க கன்னிப் பயணத்தை மேற்கொண்டிருந்தது.

J-20 சீனாவின் ஒரேயொரு புதிய விமானமாகும். அதேநேரத்தில் மக்கள் விடுதலை இராணுவம் தனது ஆளில்லா விமான அணியை மேம்படுத்துவதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இந்த இராணுவம் பெரும்பாலும் எந்தவொரு ஆளில்லா விமானத்தையும் (UAVs) கொண்டிருக்கவில்லை. விமான வர்த்தகத்துறை இன்று எடுத்துக் காட்டுவதின்படி, வளர்ச்சியுறும் நிலையிலுள்ள பலவிதமான ஆளில்லா விமான மாதிரிகளை சீன ஒப்பந்தக்காரர்கள் காட்சிப்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது. அவற்றுள் மிகக் குறிப்பிடத்தக்கவை: Yilong (Pterodactyl I) மற்றும் BZK-005 என்பவையாகும். இவை இரண்டும் முறையே அமெரிக்க இராணுவத்தின் Predator மற்றும் Global Hawk என்பவற்றை ஒத்தவையாக இருக்கின்றன. சீனாவின் வருங்கால UAVs பெரும்பாலும் அமெரிக்க தொழில்நுட்பத்தைப் பெற்று வடிவமைக்கப்பட்டவையாகவே இருக்கும். கடந்த வருடம் தன் எல்லைக்குள் வீழுந்த முன்னேற்றகரமான ஆளில்லா விமானமான RQ – 170 ஐ ஈரான் தயாரிப்பதற்கு சீன விஞ்ஞானிகளின் உதவி வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

மேலதிகமாக சீனா தனது கடற்படைக்கென பெரும் முதலீடுகளைச் செய்துள்ளது. தற்பொழுது அமெரிக்கா மட்டுமே உலகின் எந்த மூலைக்கும் யுத்த விமானங்கள் அடங்கிய தனது விமானந்தாங்கிக் கப்பல்களை அனுப்பும் ஒரேயொரு நாடாக இருக்கின்றது. மக்கள் விடுதலை இராணுவம் அதை மாற்றியமைக்க விரும்புகிறது. கடந்த சில ஆண்டுகளாக சீனர்கள் 65,000 தொன் எடையுள்ள சோவியத் விமானந்தாங்கி கப்பலை திருத்தி அமைப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர் (இதற்காக மக்கள் விடுதலை இராணுவம் பிரயத்தனப்பட்டுப் பெற்ற ஒரு போலியான பிரயாண முகவர் அமைப்பைப் பயன்படுத்துகிறது) இதில் புதிய இயந்திரங்கள், ஆயுதங்கள் தரையிலிருந்து விண்ணுக்கு ஏவப்படும் 'பறக்கும் புலி' ஏவுகணைகள், தானியங்கி விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கி அமைப்புகள் என்பன புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளன.

Liaoning என அழைக்கப்படும் இந்த விமானம் தாங்கிக் கப்பலில் அமெரிக்காவின் F-18 இற்குச் சமமான J-15 Flying Shark உட்பட 50 விமானங்களை தாங்கிச் செல்லக்கூடியதாகும். அதேநேரத்தில் சீனா அணுசக்தி நீர்மூழ்கிகள் மற்றும் பேராசைத்தனமான தாக்குதல்கள் கப்பல்களுடன் கூடிய 8,000 தொன் எடையுள்ள நாசகாரிக் கப்பல்களை இரகசியமாக உருவாக்கி வருகிறது. 2000 துருப்புக்கள், 300 வாகனங்கள் என்பவற்றை ஏற்றிச் செல்லக்கூடிய 36,000 தொன் எடையுள்ள Bahai Sea Green Pearl துருப்புக் காவிக் கப்பல் ஒன்றை சீனா நவீனமயப்படுத்தி வருகிறது. இந்த புதிய புஜபலத்தின் மூலம் சீனா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா போன்ற தூரப் பகுதிகளிலுள்ள ஐ.நா சமாதான நடவடிக்கைகளுக்குத் தனது துருப்புக்களையும் பொலிசாரையும் அனுப்பி வைத்துள்ளது.

சில விடயங்களில் சீனாவின் எழுச்சியானது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த ஜேர்மன் சக்கராதிபத்தியத்தை எதிரொலிப்பதாக இருக்கிறது. அந்த நேரத்தில் பிரித்தானியாவே உலகின் கேள்விக்கிடமற்ற பொருளாதார, இராணுவ மேல்நிலை அதிகார சக்தியாக இருந்தது. எப்பொழுது ஜேர்மனி பிரித்தானியாவின் மிகச் சக்திவாய்ந்த சண்டைக் கப்பலான Grand Fleet's இற்கு சமதையாக போர்க் கப்பல்களை உருவாக்கத் தொடங்கியதோ, அப்பொழுதே இரண்டு தேசங்களும் ஆயுதப் போட்டியில் இறங்கியதுடன், அது முடிவில் முதலாம் உலகப் போருக்கு இட்டுச் சென்றது. ஆனால் போர் வெடித்த போது ஜேர்மனியின் ஆழ்கடல் கப்பல்களிடம் பிரித்தானியா தனது எந்தவொரு போர்க் கப்பலையும் இழக்கவில்லை. மறுபக்கத்தில் எதிர்பாராது வந்த புதிய தொழில்நுட்பங்களைக் கொண்ட ஜேர்மானிய கடற்கண்ணிகளாலும், நீர்மூழ்கிகளாலும் யுத்த விதிகள் மாறியதுடன், 13 பிரித்தானிய யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

அதுபோலவே மக்கள் விடுதலை இராணுவம் முன்னேற்றமடைந்த தொழில்நுட்பங்களை அதிகமாகப் பெற்றதின் மூலம், அமெரிக்காவின் கடல் மற்றும் விமானத் துறையுடனான போட்டியில் ஈடு கொடுக்கும் நிலையை அடைந்துள்ளது. கடல்களில் பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க கப்பல்களுக்கு பயமுறுத்தலாக அமைவதானால், சீனா அமெரிக்கா அளவுக்கு மிகச் சக்திவாய்ந்த தொகையான கடற்படையைக் கொண்டிராத வரை அது சாத்தியமில்லை. அதை அடைவதற்கு மக்கள் விடுதலை இராணுவம் தகவல் தொடர்கள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள், ரடார் திரையில் தென்படாத நீர்மூழ்கிகள் என்பவற்றைப் பெற்று சில நிமிடங்களில் இலக்குகளைத் தாக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

அதேநேரத்தில் சீனா, அமெரிக்காவுக்கு அடுத்ததாக விண்வெளி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. அமெரிக்காவின் 80 வீதமான அரசாங்க மற்றும் இராணுவ தொடர்பு சாதனங்கள் களத்தில் உள்ள இராணுவ வீரர்களின் இலக்குத் தவறாத ஏவுகணைத் தாக்குதல்கள், செய்மதிகளின் பயணம் என்பவற்றுக்கு நேரடித் தொடர்புள்ளவையாக உள்ளன. விமானந்தாங்கிகள் முதல் தனிப்பட்ட குண்டுத் தாக்குதல் மற்றும் பீரங்கித் தாக்குதல் வரையிலான எல்லாவற்றின் மீதுமான 800,000 இராணுவ கிரகிப்பாளர்களின் நடமாட்டங்களையும் GPS செய்மதிகளே கட்டுப்படுத்துகின்றன. இந்த அமைப்புமுறை தவறாகப் பயன்படுத்த முடியாத ஒன்று அல்ல. 2010இல் திடீரென ஏற்பட்ட கோளாறால் 10,000 வரையிலான கிரகிப்பாளர்கள் சில நாட்களாக தொடர்பற்றுப் போயின.

இதேநேரத்தில் சீனாவும் வான்வெளியில் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆற்றலை விஸ்தரித்துள்ளது. அது தனது

செய்மதிகளை அழிக்கும் ஏவுகணைகளின் திறனையும் நிரூபித்துள்ளது. சிறிய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடாத்தும் விமானங்கள் போன்ற மைக்ரோ செய்மதிகளை மக்கள் விடுதலை இராணுவம் திறமையான முறையில் உருவாக்கி வருகின்றனது. இதில் பொருத்தப்பட்டுள்ள நேரடி சக்தி (லேசர்) கருவிகள் விண்வெளியிலுள்ள அமெரிக்க கட்டமைப்பை குருடாக்கக்கூடிய அல்லது நீர்த்துப்போக வைக்கக்கூடியவை. 2007இல் இராணுவ விஞ்ஞானத்துக்கான சீன கல்விக்கழகத்தின் ( மக்கள் விடுதலை இராணுவத்தின் உயர்தரமான ஆய்வு மையம்) சிரேஸ்ட கேர்ணலான யாவோ யுன்ஸு (Colonel Yao Yunzhu) , அமெரிக்கா நீண்ட காலத்துக்கு உலகின் "விண்வெளி மேல்நிலை சக்தி" (Space Superpower) யாக இருக்க முடியாது என அறிவித்தார். அடுத்த தசாப்தத்தில் சீனா 100 வரையிலான சிவிலியன் மற்றும் இராணுவ செய்மதிகளை விண்ணுக்கு அனுப்ப இருப்பதுடன், மக்கள் விடுதலை இராணுவம் மனிதனற்ற, மறுபாவனை விண்வெளி ஓடத்தைப் பரிசோதிக்க உள்ளது.

சீனாவின் முக்கியமான புதிய ஆற்றல் என்னவென்றால் அதன் மக்கள் விடுதலை இராணுவத்தால் கூறப்படும் "தகவல் யுத்தம்" (Informationized War) அல்லது சைபர் (Cyber) யுத்தம் ஆகும். இப்பொழுது அமெரிக்க இராணுவம் தனது சொந்த சைபர் ஆணையத்தை உருவாக்கியுள்ளது. சீனா சைபர் யுத்த திட்டங்களுக்காக 130,000 பேரை நியமித்துள்ளது. பாதுகாப்புச் செயலாளர் லியோன் பனெற்றா கூறுகையில், அமெரிக்க அரசாங்கத்தின் இரகசியங்களையும், புத்திஜீவிகளின் ஆவணங்களையும் களவாடும் அபாயம் நிலவுவதால், ஒரு சைபர் பேர்ல் துறைமுகத்துக்கான (Pearl Harbour) அபாயம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கைகள் சீனாவில் உருவாக்கப்பட்டது எனக் கருதப்படுவதுடன், அது இராஜாங்க திணைக்களத்தின் பெறுமதியான வலையமைப்பை ஸ்தம்பிக்கச் செய்ததுடன், F-35 கூட்டு தாக்குதல் திட்டத்திற்கும் தடங்கலை உண்டுபண்ணியுள்ளது.

1984ஆம் ஆண்டின் Red Dawn என்ற திரைப்படத்தில் வரும் ஒரு பாத்திரம் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான யுத்தம் ஏன் தவிர்க்கப்பட முடியாதது என்பதை விளக்குகிறது. "முரட்டுத்தனமான இரு குழந்தைகள் ஒரு இடத்தில் இருக்கிறார்கள். நான் நினைக்கிறேன், விரைவிலோ அல்லது பின்னரோ அவர்கள் சண்டையிடுவார்கள்". சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஹொலிவூட் இந்தத் திரைப்படத்தை மீள் தயாரிப்புச் செய்தபோது, அதன் தயாரிப்பாளர்கள் சோவியத் கெட்டவர்கள் இருந்த இடத்தில் சீனர்களை வைத்து அதன் மூலக் கதையை மாற்றி அமைத்தார்கள். அதன் பின்னர் உண்மையான உலக பொருளாதாரங்கள் விளையாட ஆரம்பித்திருந்தன. மீள் தயாரிப்புச் செய்தபோது, சீனாவின் பல கோடி ரூபா பெறுமதியான திரைப்படச் சந்தை வாய்ப்பைத் தவறவிடுவதைத் தவிர்ப்பதற்காக வட கொரியா மீதான விரோதமான பார்வையை மாற்றியிருந்தனர்.

இந்த திரைப்படம் ஒரு முக்கியமான விடயத்தைக் கோடிகாட்டியது: அமெரிக்காவும் சோவியத் யூனியனும் போலல்லாது, அமெரிக்காவும் சீனாவும் பல நூறு கோடி டொலர்கள் பெறுமதியான முதலீடுகளைப் பரஸ்பரம் செய்துள்ளனர். இந்த இரு நாடுகளுக்குமிடையில் போர் மூண்டால் அது, பரஸ்பரம் பெரும் அழிவுகளை ஏற்படுத்தும். இரண்டு பக்கத் தலைவர்களுக்கும் இது தெரியும். அமெரிக்க மற்றும் சீனப் படைகள் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதுடன், உறவுகள் சில வேளைகளில் பதற்ற நிலையை அடையவும் கூடும். ஆனால் 20ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் உலக அரசியலை நிர்ணயம் செய்த அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் யுத்தம் மூளலாம் என்ற பயம் பின்னர் நடைமுறையில் நிகழவில்லை. அதிகம் இழக்க வேண்டி வருமென்பதால், இந்த இரண்டு முரட்டுத்தனமான குழந்தைகளும் சண்டையிடுவது பிரயோசனமற்றது எனத் தீர்மானிக்கக்கூடும்.

நன்றி: Popular Science (January 2013)

***தமிழில்: ராகுல்***

## பிழை திருத்தம்

*'வானவில்' 2013 பங்குனி இதழில் (27ஆவது இதழ்) வெளியான காவலூர் பாலன் எழுதிய 'முன்மாதிரியான பின்லாந்தின் கல்வி முறை' என்ற தலைப்பிலான கட்டுரையில் (பக்கம் - 8)*

"1930களிலேயே எமது மதிப்புக்குரிய C.W.W.கன்னங்கார அவர்களால் எல்லோருக்கும் இலவசக் கல்வி என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு" *என்று வருகிறது. அது தவறு.*

*கன்னங்கார அவர்கள் இலங்கையின் கல்வி அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் அவரது முயற்சியால் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை அனைவருக்கும் இலவசக் கல்வி என்ற திட்டம் 1945 ஒக்ரோபர் 1ஆம் திகதி அமுலுக்கு வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.*

**ஆசிரியர் குழு**

"எங்கள் குட்டி தேவதை பிரெஞ்சஸ்கா மார்புச் சளியால் மூன்று நாட்கள் மூச்சு திணறி இறந்தாள். எங்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை அவள் பிறந்தபோது தொட்டில் வாங்ககூட எங்களிடம் காசு இல்லை, இறந்தபோது சவப்பெட்டி வாங்ககூட காசு இல்லை".

**– கார்ல் மார்க்ஸின் மனைவி ஜென்னியின் நாட்குறிப்பு ஏட்டிலிருந்து, அவர்களது மகள் பிரெஞ்சஸ்காவின் மரணம் குறித்து.**

# தமிழ் தேசியவாதம் அன்றும் இன்றும்!

**கீ**ழே தரப்பட்டுள்ள சில வசனப் பந்திகள் மாதகல் மயில்வாகனப் புலவர் அவர்களால் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய 'யாழ்ப்பாண வைபவமாலை' என்னும் பிரசித்தி பெற்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இந்த நூலையே இலங்கைத் தமிழ் தேசியவாதிகள் தமது வரலாற்று ஆவணமாக பெருமையுடன் குறிப்பிடுவதுண்டு. அதேபோல, நல்லூர் இராசதானியைக் கபடத்தனமாகவும், கொலை மூலமும் கைப்பற்றிச் சிறிது காலம் ஆட்சி செய்த சங்கிலி மன்னனையே 'ஆண்ட தமிழினத்தின்' கடைசி மன்னனாகக் குறிப்பிடுவதும் உண்டு.



சங்கிலியன் அரண்மனை முகப்பு

இன்று இலங்கையில் 'பொதுபல சேனா' என்ற சிங்கள இனவாத அமைப்பொன்று முஸ்லீம் மக்களுக்கெதிராக இனவாத விசத்தைக் கக்கி வருகிறது. 1915இல் நடைபெற்ற சிங்கள – முஸ்லீம் கலவரத்தின் பின்னர் எழுந்துள்ள பெரும் முரண்பாடு இதுவாகும். அதேவேளை பொதுபல சேனாவின் நடவடிக்கைகளை விஞ்சும் வகையில், 1995 ஒக்போரபரில் புலிகள் வட பகுதியில் வரலாற்றுக் காலம் முதல் வாழ்ந்த முஸ்லீம் மக்களை 2 மணித்தியால முன் அறிவித்தலில் அங்கிருந்து விரட்டியடித்து இனச் சுத்திகரிப்புச் செய்தனர். இப்பொழுதுகூட முஸ்லீம்களைச் சகோதரர்கள் என்று ஒரு பக்கத்தில் கூறிக்கொண்டு, அந்தச் 'சகோதரர்களை' (முஸ்லீம் மக்களை) முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரச காணிகளில் குடியேற்றுவதை புலிகளின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தடுத்து வருகிறது.

இலங்கையில் காலத்துக்குக் காலம் (முக்கியமாக ஐ.தே.க ஆட்சிகளில்) தமிழ் மக்களுக்கு எதிராக இன வன்செயல்கள் நடைபெற்று வந்தது. அதேபோல முஸ்லீம் மக்களுக்கெதிராகவும், கிறிஸ்தவ மதத்தினருக்கு எதிராகவும் வன்செயல்கள் நடைபெறுவதும் இன்று வழமையாகிவிட்டது. இந்த விடயத்தில் சிங்கள இனவாதிகளுக்கு எதிராக மட்டுமின்றி, தமிழ் இனவாதிகளுக்கு எதிராகவும் விரல்களை நீட்டுவது தவிர்க்க முடியாதது.

புலிகள்தான் பிற இன, பிற மத மக்களுக்கு எதிரான தாக்குதல்களை ஆரம்பித்து வைத்தவர்கள் என்ற ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. ஆனால் அது பாதி உண்மைதான்.

அதற்கு முன்பே தமிழ் காங்கிரஸ் – தமிழரசுக் கட்சிகள் அந்தக் கைங்கரியத்தைத் தாராளமாகச் செய்து வந்துள்ளன. உதாரணமாக முஸ்லீம் மக்களைப் பார்த்து "சோனிகள்" எனவும், "முக்கால்கள்" எனவும், "தொப்பி பிரட்டிகள்" எனவும் தமிழரசுக்கட்சி பட்டம் சூட்டியது.

ஆனால் அதற்கும் முன்னதாகவே, அதாவது நவீன வரலாற்றுக் காலத்துக்கு முன்னதாகவே, 'யாழ்ப்பாணியம்' (யாழ்ப்பாண சைவ வேளாள மேட்டுக்குழாமினர்) பிற இன, பிற மதத்தினரைத் தனது கோர நகங்களால் பிறாண்டியதை, மயில்வாகனப் புலவர் தனது 'யாழ்ப்பாண வைபவமாலை' என்னும் நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார். எனவே யாழ்ப்பாணியத்தின் தமிழ் தேசிய மேலாதிக்க வெறி என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அதனால்தான் புலிகள் இலங்கை மண்ணிலிருந்து அழிக்கப்பட்டாலும், அவர்கள் நடைமுறைப்படுத்திய தமிழ் பாசிசவாதத்தின் முட்டைகளை புலிகளின் வாரிசுகள் புலம்பெயர் நாடுகளிலும், யாழ்ப்பாணத்திலும் கவனமாக அடைகாத்து வருகின்றனர்.

இந்தப் பாசிச முட்டைகள் குஞ்சு பொரித்தால், தமிழர் வாழ்வு மீண்டும் நாசமாவது நிச்சயம். எனவே அவ்வாறு நடக்காமல் தடுப்பது தமிழ் மக்களின் கைகளில்தான் உள்ளது.

சரி வாசகர்களே! இனி மயில்வாகனப் புலவரைத் தரிசியுங்கள். மாதகல் மயில்வாகனப் புலவரின் இந்த 'யாழ்ப்பாண வைபவமாலை' நூல், முதன்முதலாக 1884ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வி.வி.சதாவிவம்பிள்ளை அவர்களால் சென்னையில் அச்சிடப்பட்டது. அதன் ஆகப் பிந்திய பதிப்பை கனடாவில் இயங்கும் வல்வை ஆவணக் காப்பகம் 2004இல் கனடாவில் வெளியிட்டுள்ளது.

## இதோ 'யாழ்ப்பாண வைபவமாலை'யில் இருந்து சில பகுதிகள்:

### சங்கிலி சிங்காசனத்தைக் கைப்பற்றுதல்

"அக்காலத்தில் ஒருநாள் **பண்டாரம்** என்னும் இளவரசன் பூஞ்சோலை சுற்றிப் பார்த்து வருகையிற் **சங்கிலி** மறைவிலே நின்று வாளினால் வெட்டிக் கொலை செய்து, இராச்சியந் தனக்கென்று முன்னின்றான். அவன் தன் உயிரையுஞ் சிதைப்பானென்னும் பயத்தினாலே **பரராச மகாராசன்** பேசாதே ஒதுங்கிவிட்டான்...
(பக்கம் – 57)

சில காலத்துக்குள்ளே சங்கிலி சேனைகளைத் தன் வசப்படுத்திப் பெலத்துக்கொண்டு பரநிருபசிங்கத்துக்குப் பங்கீட்டுக் கொடுத்த வந்த பங்கையும் பரராசசிங்கத்துக்குக் கொடுத்திருந்த தேசாதிகாரத் தலைமையையும் நிறுத்தி, மந்திரி உத்தியோகத்துக்குச் சம்பளம் மாத்திரம் கொடுக்கத் தொடங்கினான்...
(பக்கம் – 58)

### பறங்கிக்காரர்

அந்நாட்களிற் பறங்கிக்காரர் மன்னாரில் வியாபாரம் பண்ணி வரத்துப் போக்காயிருக்கையில் அவர்கள் செய்த உபதேசத்தினால் அறுநூறு குடிகளிற் சனங்கள் சத்தியவேதத்திற் சேர்ந்தார்கள். அதைக் கேள்விப்பட்டவுடனே சங்கிலி இராசன் அந்த அறுநூறு வீட்டுக்காரரையும் பெண் ஆண் குழந்தையென்னும் பேதம் பாராட்டாமல் அனைவரையும் வெட்டுவித்தான்.

### சிங்களவரைத் துரத்தல்

யாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் இருந்த புத்த சமயக் கோவில்களையெல்லாம் இடிப்பித்துச் சிங்களக் குடிகளை முழுதாகத் துரத்திவிட்டான். அந்தச் சிங்களக் குடிகள் ஒன்றாகிலும் இருந்ததில்லை...

கண்டி நாட்டிலும் வன்னியிற்காட்டிலும் போயொதுங்கினார்கள். அது முதல் சிங்களக் குடிகள் (தி.த.க.பிரதி)

பிரான்சிஸ் சவேரியார் என்னும் கத்தோலிக்க குரு தென்னிந்தியாவிலே பரதவர்களுக்குச் சுவிசேஸ சேவை செய்து வருங்கால், தம் பெயரையுடைய பரதவக் குரு ஒருவரை மன்னாருக்கனுப்பி, அங்கிருந்த கடையர்களுள் 600 பேரை கி.பி 1543ல் கிறிஸ்தவர்களாக்குவித்தார்.

இப்பெருங்கொலை நிகழ்ந்தது 1544 – ஆம் வருசம் மார்கழி மாதத்திலாகும்.
(பக்கம் – 59)

### யாவுகர்

முன் விசயவாகுவின் கீழ்ப் போர்ச் சேவகராய் இருந்த யாவுகச் சேனையிலே கொலைக்கும் இராச தண்டனைக்கும் தப்பியிருந்த சில யாவுகக் குடிகள் சாவாங்கோட்டையிலும் சாவகச்சேரியிலும் இருந்தார்கள். அவர்களையும் துரத்திவிட்டான்.
(பக்கம் – 60)

### சோனகர்

அக்காலத்திலே **சந்தச்சாய்பு** என்பவனால் மகம்மது மார்க்கத்தவர்களாக்கப்பட்ட தமிழ் வமிசத்தவர்களான சில சோனகக் குடிகள் **காயில் பட்டணம்** முதலிய இடங்களிலிருந்து வந்து தென்மிருசுவில் என்னும் ஊரிலே குடியிருந்து, **சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில்** என்னுமிடங்களிலுள்ள சந்தைகளில் வியாபாரம் பண்ணிக்கொண்டு, தாங்களிருந்ததென மிருசுவிலுக்கு உசனென்று பேருமிட்டார்கள்.

சில காலம் அவ்விடத்திலிருந்து, அவ்விடம் வசதிப்படாததினால், அந்தச் சோனகக் குடிகள் அவ்விடத்தை விட்டு, நல்லூரிற் கந்தசுவாமி கோயிலிருந்த இடத்திலே வந்து குடியிருந்தார்கள். சோனகர் அதிலே குடியிருந்தால் **கந்தசுவாமி கோவில்** கட்ட வருங்காலத்திற்கு தடையாயிருக்கும் என்று நினைத்துத் தமிழர் கூடி அவர்களை அவ்விடத்தை விட்டுப் புறப்படுத்தத் தெண்டித்துப் பார்த்துங் கூடாமற் போயிற்று.

"அந்த நிலங்களுக்கு அதிக விலை தருவோம். எங்களுக்கு விற்றுவிடுங்கள்" என்றுங் கேட்டுப் பார்த்தார்கள். சோனகர் அதற்குஞ் சம்மதியாதே போனதனால், அந்தத் தமிழர் பன்றியிறைச்சியைக் கொண்டு போய் அவர்கள் தண்ணீர் குடிக்கும் கிணறுகளிற் போடுவித்தார்கள். பன்றியிறைச்சியைக் கண்டவுடனே சோனகர் அழுது புலம்பிப் பசி பட்டினியாய்க் கிடந்து, ஆற்றாமல், ஈற்றிலே தமிழருடனே தங்கள் பெருநாட்களிலே தாங்கள் வந்து தங்கள் சமய வழிபாடு செய்யத் தடை பண்ணாதிருப்பதற்கு ஓர் உடன்படிக்கை எழுதுவித்துக்கொண்டு, கிடைத்த விலையையும் வாங்கிக்கொண்டு போய், **நாவாந்துறை**க்குக் கிழக்குப் பக்கமாகக் குடியேறினார்கள்.
(பக்கம் – 91 – 2)

*

*"உலகத்தின் உடமைகள் அனைத்தும் மக்கள் அனைவருக்கும் பொதுவானவை அவற்றை காலப்போக்கில் சில வசதி படைத்த மனிதர்கள் தங்கள் தனியுடமையாக்கிக் கொண்டனர். தொழிலாளிகளின் உழைப்பை சுரண்டி முதலாளிகள் வளர்கின்றனர். அதனால்தான் இருப்பவர்கள் சிலரும், இல்லாதவர்கள் பலருமாக சமுதாயம் மாறி வருகிறது. இந்த நிலை மாற வேண்டும். அதற்கு முதலாளிகள் இணங்க மாட்டார்கள். ஆகவே தொழிலாளிகள் ஒன்று திரண்டு போராடி புரட்சி செய்து தங்கள் உரிமைகளைப் பெற வேண்டும்".*

**– கார்ல் மார்க்ஸ்**

# முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லீம் மக்களைக் குடியேறவிடாது தடுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயல் இனவாதத் தன்மையுடையது!

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான காட்டுக் காணிகளில் ஒரு பிரிவு முஸ்லீம் மக்களைக் குடியேற்ற எடுக்கப்பட்ட முயற்சியை எதிர்த்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டமொன்றைச் செய்தனர். அதன் பின்னர் முஸ்லீம் மக்களைக் குடியேற்றுவதை ஆதரித்தும், தமிழ் - முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தை வலியுறுத்தியும் இன்னொரு ஆர்ப்பாட்டமும் இரண்டொரு தினங்களில் அங்கு நடைபெற்றது. ‘மக்கள் தன்னிச்சையாகவே ஆர்ப்பாட்டம் செய்தார்கள்’ என இவற்றை ஒழுங்கு செய்தவர்கள் சொல்லிக் கொண்டாலும், இந்த இரண்டு ஆர்ப்பாட்டங்களும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அரச எதிர்ப்பாளர்களாலும், அரசஆதரவாளர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டவை என்பதை இங்குள்ள மக்கள் நன்கு அறிவர்.

இந்த எதிரும் புதிருமான ஆர்ப்பாட்டங்களின் போது, முஸ்லீம்களுக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டத்தில் அதிகளவான மக்கள் கலந்து கொள்ளாதது அவர்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முஸ்லீம் மக்களுக்கெதிரான இனவாதப் போக்கை ஆதரிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டியது. இருந்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ‘சப்றா புகழ்’ ஈ.சரவணபவனின் ‘உதயன்’ பத்திரிகை ‘மக்கள் பெருமளவில் கொதித்து எழுந்து அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்’ என வழமைபோல பொய்யாகப் புளுகித் தள்ளியது.

அங்குள்ள தமிழ் பொதுமக்கள் முஸ்லீம்களுக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டத்தில் அதிகம் கலந்து கொள்ளாமைக்கு சில காரணங்கள் இருக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகளால் வெளியேற்றப்படும் வரை, முஸ்லீம் மக்கள் நீண்டகாலமாக ஐக்கியமாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பது முதற் காரணம். அடுத்த காரணம், தமிழ் தலைமைகள் சிங்கள மக்களுக்கு எதிராக மட்டுமின்றி, முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும் கக்கி வந்த இனவெறியை தமிழ் பொதுமக்கள் ஒருபோதும் மனதார ஏற்றது கிடையாது. இதை 1990இல் வடக்கிலிருந்து




முஸ்லீம்களை புலிகள் வெளியேற்றிய போது அவதானிக்க முடிந்தது. அந்த நேரத்தில் புலிகளுக்குப் பயந்து தமிழ் பொதுமக்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்திருந்தாலும், புலிகளின் நடவடிக்கையைத் தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லை. முஸ்லீம் மக்களைப் புலிகள் வெளியேற்றிய செயலை வடபகுதி தமிழ் மக்கள் கனத்த இதயத்துடனேயே சகித்துக் கொண்டனர்.

**எஸ்.விக்கினராஜா (தண்ணீரூற்று)**

அதேபோல வடக்கிலிருந்து தம்மைப் புலிகள் வெளியேற்றிய செய்கைக்காக முஸ்லீம் மக்கள் சாதாரண வடபகுதித் தமிழ் மக்கள் மீது வெறுப்புக் கொண்டது கிடையாது. முஸ்லீம் மக்கள் உடுத்த துணியுடன் கைக்குழந்தைகளுடனும், நடக்க முடியாத வயோதிபர்களுடனும் புலிகளால் காட்டுமிராண்டித்தனமாக கொட்டும் மழையில் வெளியேற்றப்பட்ட பின்னர், அவர்கள் தென்னிலங்கைக்குச் சென்று பல பகுதிகளில் அகதிகளாக வருடக்கணக்காக வாழ நேர்ந்தது.

இந்த நேரங்களில் அங்கு வரும் வடபகுதி தமிழ் மக்களைக் கண்டால், எவ்விதமான மனஸ்தாபமும் இல்லாமல் வாஞ்சையுடன் அவர்கள் பழகியதை வடபகுதியின் அனைத்துத் தமிழ் மக்களும் அறிவர்.

யாழ்ப்பாண மாவட்டம் மாத்திரமின்றி, முல்லைத்தீவு மாவட்டம் உட்பட வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லீம் மக்கள் காலங்காலமாக தமிழ் மக்களுடன் இணைந்து வாழ்ந்து வந்துள்ளனர். அதுமட்டுமின்றி கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லீம் மக்கள், ஆரம்ப காலங்களில் பெரும் எதிர்பார்ப்புகளுடன் தமிழரசுக்கட்சி அரசியலில் ஈடுபட்டதுடன், பலர் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றனர். ஆனால் பிற்காலத்தில் அவர்களது தனித்துவத்தைத் தமிழரசுக்கட்சி அங்கீகரிக்காது தமிழ் பேரினவாத நிலைப்பாட்டில் செயற்பட்ட காரணத்தால், அவர்கள் தேசிய அரசியல் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவற்றுடன் இணைந்து தமது உரிமைகளைப் பாதுகாக்க முனைந்தனர். பின்னர் அந்தக் கட்சிகளும் சரியான முறையில் அவர்களைக் கவனிக்காத போது, தமது தாயக மண்ணான கிழக்கிலிருந்து ‘முஸ்லீம் காங்கிரஸ்’ என்ற அமைப்பை உருவாக்கினர்.

அவர்கள் தமது தனித்துவத்தைப் பேண முயற்சித்த போதும், தமிழ் மக்களுடனான உறவை விருப்பத்துடனும் இதய சுத்தியுடனும் தொடர்ந்தே வந்தனர். ஆனால் தமிழ் தலைமைகள்தான் முஸ்லீம் மக்களைப் பார்த்து, ‘தொப்பி பிரட்டிகள்’, ‘முக்கால்கள்’, ‘சோனிகள்’ என வசைபாடத் தொடங்கினர். தமிழ் தலைமைகளே, குறிப்பாகத் தமிழரசுக் கட்சியே, முஸ்லீம்களுடனான உறவைச் சீர்குலைத்தவர்கள் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. பின்னர் தமிழ் தலைமைகள் பெற்றெடுத்த பிள்ளைகளான புலிகள் முஸ்லீம் மக்களுக்குச் செய்த கொடுமைகள், ஹிட்லர் யூதர்களுக்குச் செய்த கொடுமைகளுடன் ஒப்பிடக் கூடியவை என்றால் அது மிகையாகாது.

புலிகள் முஸ்லீம் மக்களை 2 மணித்தியால அவகாசத்தில் வடக்கிலிருந்து வெளியேற்றிய போதோ, அவர்கள் தொழுகையில் ஈடுபட்டிருக்கும் போது பள்ளிவாசல்களில் புகுந்து நூற்றுக்கணக்கில் சுட்டுக் கொலை செய்தபோதோ, அது சம்பந்தமாக தமிழ் தேசியக் கூட்மைப்பு ஒரு கண்டன வார்த்தைகூடச் சொன்னது கிடையாது. புலிகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பயந்துதான் அப்பொழுது பேசாமடந்தைகளாக இருந்தார்கள் என ஒரு வாதத்துக்கு வைத்துக் கொண்டாலும், போர் முடிவடைந்து, புலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட பின்னர், அவர்களால் ஏற்படக்கூடிய ஆபத்து நீங்கிய பின்னராவது சுய விமர்சன ரீதியில் புலிகள் செய்த அநியாயத்துக்கு அவர்களது ஆதரவாளர்கள் என்ற வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் முஸ்லீம் மக்களிடம் வருத்தம் ஏதாவது தெரிவித்தார்களா? அதுதான் போகட்டும், குறைந்த பட்சம் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களை திரும்பி வந்து தமது சொந்த இடங்களில் குடியேறுமாறுகூட தமிழ் தேசியக் கூட்டமைப்பு கேட்கவில்லை. கடைசி, அரசாங்கத்திடம் முஸ்லீம் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றும்படி தன்னும் கோரவில்லை.

ஆனால் இப்பொழுது முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லீம் மக்களைக் குடியேற்றுவதை மட்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரிந்து கட்டிக்கொண்டு எதிர்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? அதுவும் அவர்களைக் குடியேற்றப்போவது தமிழ் மக்களுடைய காணிகளில் அல்ல. அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளில். வடக்குக் கிழக்கில் உள்ள காணிகள் எல்லாம் தமிழ் மக்களுக்குச் சொந்தம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோருமானால், அதே வடக்கு கிழக்கைத் தமது தாயகமாகக் கொண்ட முஸ்லீம் மக்களுக்கும் அந்தக் காணிகள் சொந்தமானவைதான். அவர்கள் அந்த மாகாணங்களில் குடியேறி வாழ்வதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமின்றி, எந்தத் தமிழ் இனவாத சக்திகளும் தடுக்க முடியாது.

முஸ்லீம் மக்கள் புலிகளால் வடக்கிலிருந்து விரட்டப்படாமல் இருந்திருந்தால், அவர்கள் தமது வியாபாரம், உத்தியோகம் மற்றும் தொழில்கள் மூலம், தமது வாழ்வைச் சிறப்பாக நடாத்தி, தமது எதிர்காலச் சந்ததிக்கும் ஒரு வாழ்வை உத்தரவாதப்படுத்தியிருப்பார்கள். ஆனால் அவர்கள் புலிகளால் வேருடன் பிடுங்கி எறியப்பட்டு 20 வருடங்களுக்கும் மேலாகிவிட்டதால், அவர்களது பிள்ளைகள் வளர்ந்து, திருமணம் முடித்து, அவர்களது குடும்பங்களும் பல்கிப் பெருகிவிட்ட நிலையில், அவர்கள் குடியிருப்பதற்கே நிலமற்று இருக்கிறார்கள். எனவே அவர்களது பிள்ளைகளுக்குத் தன்னும் வடக்கிலுள்ள அரச காணிகளில் இடம் ஒதுக்குவது அவசியமானது. இந்த மனிதாபிமாகக் கடமையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தடுப்பது அப்பட்டமான தமிழ் இனவாதமேயன்றி வேறொன்றுமல்ல.

ஒரு பக்கத்தில் தமிழர்களும் முஸ்லீம்களும் சகோதரர்கள் என வாக்கு வேட்டைக்காகச் சொல்லிக்கொண்டு, மறுபக்கத்தில் முஸ்லீம் மக்களின் அத்தியாவசிய தேவையைக்கூட நிறைவேற்ற விடாது தடுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயல், சிங்களப் பேரினவாதிகளின் செயலையும் விட மோசமானது என்பதை, நியாய புத்தியுள்ள அனைத்துத் தமிழ் மக்களும் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானது. *

# புதிய வெனிசூலா ஜனாதிபதியாக மோரோஸ் பதவி ஏற்பு!

தென் அமெரிக்க நாடான வெனிசூலாவில் பொலிவேரிய புரட்சியை (Bolivarian Revolution) நடாத்தி, அந்த நாட்டை முற்போக்குப் பாதையில் வழிநடாத்திய மக்கள் அபிமானம் பெற்ற புரட்சித் தலைவர் ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் புற்று நோயால் காலமானதைத் தொடர்ந்து, அந்த நாட்டில் 2013 ஏப்ரல் 14ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், அந்நாட்டு சோசலிஸக் கட்சியின் புதிய தலைவர் நிக்கோலஸ் மதுரோ மோரோஸ் (Nicholas Maduro Moros) வெற்றி பெற்றுள்ளார்.



நிக்கோலஸ் மதுரோ மோரோஸ்

சோசலிஸக் கட்சி வேட்பாளரைத் தோற்கடிக்க சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளும், உள்நாட்டு எதிர்ப்புரட்சி சக்திகளும், வெனிசூலாவின் எண்ணெய் வளத்தை கடந்த காலங்களில் சுரண்டிச் சூறையாடிய கம்பனி முதலாளிகளும் பகிரதப் பிரயத்தனங்களை மேற்கொண்ட போதிலும், வெனிசூலா மக்கள் சோசலிஸ கட்சி வேட்பாளரையே தமது ஜனாதிபதியாகத் தெரிவு செய்து, பொலிவேரியப் புரட்சியை தொடர்ந்த முன்னெடுத்துச் செல்ல ஆணை வழங்கியுள்ளனர்.

புதிய வெனிசூலா ஜனாதிபதி மோரோஸ் 2013 ஏப்ரல் 19ஆம் திகதி தலைநகர் கரகாஸில் (Caracas) நடந்த நிகழ்வில் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அந்த வைபவத்திற்கு இணையாக வெனிசூலாவின் 203ஆவது தேசிய சுதந்திர தினமும் அங்கு கொண்டாடப்பட்டது.

தனது பதவி ஏற்பு வைபவத்தில் உரையாற்றிய புதிய ஜனாதிபதி, மறைந்த வெனிசூலாவின் அதிபர் சாவேஸின் சோசலிஸ இலட்சியத்தைத் தாமும் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று, வெனிசூலா மக்களை மேலும் சுபீட்சமான பாதையில் இட்டுச் செல்லப் போவதாகச் சூளுரைத்துள்ளார். அந்த இலட்சியத்தின் ஒரு அங்கமாக வெனிசூலா மக்களுக்கு 3 மில்லியன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் எனவும், சகல வெனிசூலா மக்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும் எனவும், அவர் தனது பதவி ஏற்பு நிகழ்வில் தெரிவித்துள்ளார். *

# கனடிய லிபரல் கட்சியின் புதிய தலைவராக ஜஸ்ரின் ரூடோ தெரிவு !

கனடாவின் முன்னாள் ஆளும் கட்சியான லிபரல் கட்சியின் (Liberal Party) தலைமைப் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில், 80 வீதமான வாக்குகளைப் பெற்று 41 வயதான ஜஸ்ரின் ரூடோ (Justin Trudeau) வெற்றியீட்டியுள்ளார். ஜஸ்ரின் ரூடோ கனடாவின் புகழ்பெற்ற முன்னாள் பிரதமர் பியரே ரூடோவின் (Pierre Trudeau) புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் தற்போதைய ஆளும் கட்சியான கொன்சவேர்டிக் கட்சி (Conservative Party) ஒரு தீவிர வலதுசாரிக் கட்சியாகும். அந்தக் கட்சியின் தலைவரான பிரதமர் ஸ்ரீபன் கார்பர் (Stephen Harbar) அரசாங்கம் பின்வற்றி வரும் பொருளாதாரக் கொள்கைகள், குடிவரவுக் கொள்கைகள் காரணமாக. கனடிய மக்கள் மத்தியில், குறிப்பாக குடியேற்றவாசிகள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவுகிறது. அந்த அரசின் வெளியுறவுக் கொள்கையும் கனடாவின் பல மேற்கத்தைய நட்பு நாடுகளிலிருந்தும்கூட திசை விலகிச் செல்வதாக அமைந்துள்ளதாக பல விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நிலைமையில் லிபரல் கட்சியின் தலைவராக ஜஸ்ரின் ரூடோவின் தெரிவானது பெரும்பாலான கனடிய மக்கள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது. முன்பு செல்வாக்குடைய ஆளும் கட்சியாகத் திகழ்ந்த லிபரல் கட்சி, காலத்துக்கேற்ப தனது கொள்கைகளை மறுசீரமைக்காத காரணத்தாலும், ஆளுமையற்ற தலைமைத்துவங்களாலும், கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களில் தோற்றுப்போனது. கடைசியாக நடந்த தேர்தலின் போது லிபரல் கட்சியை புதிய ஜனநாயகக் கட்சி (New Democratic Party) முந்திக் கொண்டதால், லிபரல் கட்சி மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

இந்த நிலைமை புதிய தலைவர் ஜஸ்ரின் ரூடோவின் தலைமைத்துவத்தின் கீழ் மாற்றம் காணும் என அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அவர் புதிய தலைவராகத் தெரிவான பின்னர் எடுக்கப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பில், லிபரல் கட்சியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதும் தெரிய வந்துள்ளது. *

# தமிழில் புத்தகம் எழுதிய முதல் சீனப் பெண்!

சீனப் பெண் ஒருவர் வேறெவரினதும் உதவி இன்றி, முழுக்க முழுக்கத் தனது சொந்த முயற்சியால் தமிழில் சீனா பற்றி ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறார். சர்வதேச சீன வானொலி (China Radio International) என்ற சீனாவின் வானொலி நிலையத்தில் துணைத் தலைவராக இருக்கும் ஸ்ஹோ ஜியாங் (Zhao Jiang ) என்பவரே இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். அவர் தனது புனைபெயராக 'கலைமகள்' என்ற பெயரையும் வைத்திருக்கிறார்.

முதல் முதலாக சீனர் ஒருவர் எழுதிய இந்த நூலை சென்னை கௌதம் பதிப்பகத்தினர் வெளியிட்டிருக்கின்றனர். வருடா வருடம் சென்னையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியின் இவ்வருடக் காட்சியின் போது, இந்தப் புத்தகமும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. 'சீனாவில் இன்ப உலா' என்ற தலைப்பிலான இந்தப் புத்தகத்தில் சீனக் கலாச்சாரம், சீனாவின் பெரு நகரங்களான பெய்ஜிங், சாங்காய் போன்ற நகரங்கள் தோன்றிய வரலாறு, திபெத்திய நாகரீகம் போன்ற பல விடயங்கள் சம்பந்தமாக 26 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.



ஸ்ஹோ ஜியாங் (Zhao Jiang )

இந்தப் புத்தகம் எழுதியது சம்பந்தமாக ஸ்ஹோ ஜியாங் கருத்துத் தெரிவிக்கையில், "எங்கள் நிலையத்தில் 61 மொழிகளில் நடாத்தப்படும் ஒலிபரப்புகளுக்கு உலகெங்குமிருந்து ஆண்டுக்கு 5 இலட்சம் கடிதங்கள் வருகின்றன. அதில் மிக அதிகமாக வருவது தமிழ் கடிதங்கள்தான். அவற்றில் பல கடிதங்கள் சீனாவில் பயணம் செய்வதையும் இடங்களையும் பற்றிய கேள்விகள் அடங்கியவை. இதுதான் என்னை இந்தப் புத்தகத்தை எழுதத் தூண்டியது. புரிந்து கொள்ள முடியாத தமிழ் எழுத்துக்களுடன் போராடிக் கற்றுக் கொண்டேன்" எனச் சொல்லும் அவர், தான் 15 ஆண்டுகளுக்கு முன்னர் சீனப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்றதாகக் கூறுகிறார். இப்பொழுது மிகச் சரளமாகத் தூய்மையான தமிழில் பேசுகிறார்.

சர்வதேச சீன வானொலியின் தமிழ் ஒலிபரப்பு சுமார் 62 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலில் அந்த ஒலிபரப்பில் இலங்கையிலிருந்து சென்ற ஆசிரியர், தோழர் மாதகல் வ.கந்தசாமி பணியாற்றினார். அவர் அங்கு பணியாற்றியதைப் பொறுக்காத சில இந்தியத் தமிழ் ஊடகங்கள் அவரை 'தமிழ் துரோகி' எனவும் (பாருங்கள்! தமிழர்களுடன் இந்தத் துரோகி என்ற சொல்லும் உடன் பிறந்திருப்பதை) அந்த நேரத்தில் வர்ணித்திருந்தன. பின்னர் சீன வானொலி தமிழ் பிரிவில் பணியாற்றுவதற்காகவும், அங்குள்ள அயல் மொழிப் பதிப்பகத்தில் (Foreign Languages Press) மொழிபெயர்ப்பு வேலைகள் செய்வதற்காகவும், தமிழ் கற்பிப்பதற்காகவும், ஆசிரியர் தோழர் கே.ஜனகன், கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அவர்களின் மூத்த புதல்வி ராணிரத்தினதேவி, அவரது கணவர் வீ.சின்னத்தம்பி (இவர்கள் இருவரும் சீனாவில் சந்தித்த பின் பெற்றோர்களின் அனுமதியுடன் சீனாவில் திருமணம் செய்து கொண்டனர். அதன் நினைவாக தமது மூத்த மகளுக்கு 'சீனோதயா' எனப் பெயரிட்டனர். தமது இளைய புதல்விக்கு இலங்கையை நேசிக்குமுகமாக 'சிறீ உதயா' எனப் பெயரிட்டனர்) போன்றோர் சென்று பணியாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீன வானொலியின் தமிழ் ஒலிபரப்புக்கு இப்பொழுது 22,000 பதிவு செய்யப்பட்ட நேயர்கள் இருக்கின்றன. அத்துடன் 150இற்கும் மேலான நேயர் மன்றங்களும் செயற்படுகின்றன. இந்த நேயர்களும், மன்றங்களும் பெரும்பாலும் தமிழகத்திலேயே இருக்கின்றனர்.

ஸ்ஹோ ஜியாங் மட்டுமின்றி தமிழ் கற்ற பல சீன ஆண்களும், பெண்களும் சீன வானொலி தமிழ் பிரிவிலும், வேறு பல துறைகளிலும் சீனாவில் பணியாற்றுகின்றனர். ஜியாங் 2003, 2004 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நேயர் மன்றங்களில் பங்கேற்க அங்கு சென்று வந்துள்ளார். அடுத்த ஆண்டு தமிழகத்தில் களப்பணி செய்வதற்காக அங்கு சென்று தங்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். அதுபற்றி அவர் கூறுகையில்,

"இந்தியாவைப் பார்க்க வரும் சீனர்கள், புதுதில்லி வந்து பார்த்த பின் அங்கிருந்து வட இந்தியாவிலுள்ள சில புத்தர் கோவில்களுக்கு மட்டும் சென்று திரும்புகின்றனர். அவர்களுக்குத் தென்னிந்தியாவை அறிமுகப்படுத்த விரும்புகின்றேன். இப்போது சீனாவில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிஎருக்கும் 'லைஃப் ஆப் பை' படத்தினால் தென்னிந்தியாவின் மீது ஒரு ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது"

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...

# புலிகள் மறைத்து வைத்திருந்த பெருமளவு தங்கம் தமிழகத்துக்குக் கடத்தப்படுவதாக இந்திய அதிகாரிகள் சந்தேகம்!

அண்மைக் காலமாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் தங்கம் கடத்தி வரப்படுவது அதிகரித்துள்ளதாக, இந்திய சுங்கத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்தத் தங்கம் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கட்டிருந்ததாக இருக்கலாம் என, இந்திய சுங்கத்துறை சந்தேகம் வெளியிட்டுள்ளது.

பெரும்பாலான தங்கக் கடத்தல்கள் கொழும்பு – சென்னை சர்வதேச விமானநிலையங்களுக்கு இடையில் நடைபெறுவதாக இந்திய சுங்கத்துறை தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக 'டெக்கான் குரோனிக்கள்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், "இவ்வருட (2013) ஜனவரி மாதத்தில் சென்னை விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 29 தங்கக் கடத்தல் சம்பவங்களில், 22 கடத்தல்கள் கொழும்பிலிருந்து வந்தவையாகும்" எனத் தெரிவித்துள்ளது.

புலிகளுடனான இறுதி யுத்தத்தின் போது, புலிகள் மறைத்து வைத்திருந்த 6,000 கிலோ தங்கத்தை இராணுவத்தினர் கைப்பற்றியதாக அப்பொழுது சில தகவல்கள் வெளிவந்தன. இராணுவம் கைப்பற்றியது போக, மேலும் பெருந்தொகையான தங்கம் புலிகளால் மறைத்து வைக்கட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. அவ்வாறான தங்கமே இப்பொழுது மெல்ல மெல்ல தமிழகத்துக்கு கடத்தப்படுவதாக இந்திய அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இந்தக் கடத்தல் இரண்டு வழிகளில் நடத்தப்படுவதாக இந்திய சுங்க மற்றும் புலனாய்வுத் துறையினர் சந்தேகிக்கின்றனர். ஒன்று உருக்கிய தங்கத்தை பிஸ்கட்டுகளாக மாற்றி புலி ஆதரவாளர்களான சாதாரண மக்கள் மூலம் விமான மார்க்கம் ஊடாக சென்னைக்குக் கடத்துவது. மற்றது இறுதியுத்த நேரத்தில் படகுகள் மூலம் தமிழகத்துக்குத் தப்பியோடிய புலிகளில் சிலர் இரகசியமான முறையில் படகுகள் மூலம் வன்னிக்கு வந்து, தாம் புதைத்து வைத்திருந்த தங்கத்தையும், தங்க நகைகளையும் எடுத்துச் செல்வதாகத் தெரிய வந்துள்ளது. இதற்கு சில தமிழக மீனவர்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தக் கடத்தல் பற்றிக் கருத்து வெளியிட்ட சென்னை விமான நிலையத்தில் பணியாற்றும் சுங்க அதிகாரி ஒருவர் இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், "துபாய் மற்றும் சிங்கப்பூரிலிருந்து தங்கம் கடத்தி வரப்படுவது முன்னர் அதிகரித்திருந்தது. ஆனால் இந்தப் போக்கில் சடுதியான மாற்றத்தைக் காண்கிறோம். தற்போது 75 வீதமான தங்கக் கடத்தல்காரர்கள் கொழும்பிலிருந்து வருகின்றனர். அது பாரிய வர்த்தக மையமோ, தங்கம் பெருமளவில் கிடைக்கும் இடமோ அல்ல" எனக் கூறியுள்ளார்.




பெரும்பாலும் 24 கரட் தங்கங்கள் உருக்கப்பட்ட பிஸ்கட்டுகளாகவே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அண்மையில் இலங்கைப் பெண்ணொருவர் கொண்டு வந்த குடையொன்றின் தண்டுப் பகுதி தங்கத்தால் செய்யப்பட்டு, அதற்கு கறுப்பு பெயின்ற் பூசப்பட்டிருந்ததை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இன்னொரு இலங்கைப் பயணியின் கைப்பையின் பிடி தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்வாறு இலங்கையிலிருந்து கடத்தப்படும் புலிகளுக்குச் சொந்தமானது எனக் கருதப்படும் தங்கத்தால் பெறப்படும் மூலதனம், தமிழ்நாட்டில் மறைந்திருக்கும் புலிகளின் இன்னொரு ஆயுதப் போராட்ட முயற்சிகளுக்கும், அவர்களுக்கு ஆதரவான சீமான், வைகோ போன்றவர்களின் இலங்கை அரசுக்கெதிரான பிரச்சார முயற்சிகளுக்கும் பயன்படுத்தப்படலாம் என்ற கவலை, இந்திய – இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர்களுக்கு ஏற்பட்டுள்ளது. *

11ம் பக்கத்தொடர்ச்சி.....

என்று கூறும் அவர், தாம் அடுத்ததாக தென்னிந்தியாவைப் பற்றி சீன மொழியில் ஒரு புத்தகம் எழுதப் போவதாகத் தெரிவிக்கிறார்.

சர்வசதா இந்தியாவிலுள்ள (தமிழ் உட்பட) ஊடகங்கள் சீன எதிர்ப்பு வாந்தி எடுத்து வருகையில், இருநாட்டு சாதாரண மக்கள் மத்தியிலும் இவ்வகையான ஒரு ஐக்கியம் உருவாகி இருப்பது மகிழ்ச்சியும், நம்பிக்கையும் ஊட்டுவதாக இருக்கின்றது.

– தகவல்: ராகுல்

உரத்த சிந்தனை:

# உற்பத்தி சக்திகளின் உறவில் ஏற்படும் முரண்பாடு புரட்சிக்கு இட்டுச் செல்கிறது!

"மனிதர்கள் சமுதாயத்தில் தங்கள் வாழ்வாதாரங்களுக்காக உற்பத்தியில் ஈடுபடும்போது குறிப்பிட்ட இன்றியமையாத உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவை அவர்களது சொந்த விருப்பத்தில் இருந்து விடுபட்டவையாக உள்ளன. அந்த உற்பத்தி உறவுகள் அவர்களின் பொருள் உற்பத்திச் சக்திகளின் குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்துக்குப் பொருத்தமாக அமைகின்றன. அந்த உற்பத்தி உறவுகளின் மொத்தமே சமுதாயத்தின் பொருளாதார அமைப்பாக – உண்மையான அடித்தளமாக இருக்கிறது. இதன் மீதே ஒரு சட்ட, அரசியல் மேல்கட்டுமானம் எழுகிறது. அதற்குச் சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்கள் ஒத்துப் போகின்றன.

வாழ்வுக்கான பொருள்வகைச் சாதனங்களின் உற்பத்தி முறையானது சமுதாய, அரசியல், அறிவுத்துறை வாழ்வின் மொத்த நிகழ்முறையையும் கட்டுப்படுத்துகின்றது. மனிதர்களின் உணர்வு அவர்களது வாழ்வைத் தீர்மானிப்பதில்லை. மாறாக அவர்களின் சமுதாய வாழ்வுதான் அவர்களின் உணர்வைத் தீர்மானிக்கிறது. சமுதாயத்தின் பொருள் உற்பத்திச் சக்திகள் தம் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அப்போது நிலவும் உற்பத்தி உறவுகளுடன் அல்லது அவற்றைச் சட்டபூர்வமான வகையில் வெளிப்படுத்துவதென்றால், அதற்கு முன் அவை எந்தச் சூழலுக்குள் இயங்கி வந்திருந்தனவோ, அந்தச் சொத்து உறவுகளுடன் முரண்படுகின்றன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி வடிவங்களாக இருந்ததிலிருந்து இந்த உறவுகள் அவற்றின் தளைகளாக மாறுகின்றன. அப்போதிலிருந்து ஒரு சமுதாயப் புரட்சியின் கட்டம் தொடங்குகிறது.

பொருளாதார அடித்தளத்தில் மாற்றம் ஏற்பட்டதுமே மேல்கட்டுமானம் மொத்தமும் ஏறக்குறைய உடனடியாக மாற்றம் பெறுகிறது. இத்தகைய புரட்சிகளைப் பரிசீலிக்கும்போது அறிவியல்ரீதியான துல்லியத்துடன் தீர்மானிக்க முடியக்கூடிய உற்பத்தியின் பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் பொருளாதாரப் புரட்சிக்கும், மனிதர்கள் இந்த மோதலைப் பற்றிய உணர்வுள்ளவர்களாகி அதற்குத் தீர்வு காணும் சட்டவியல், அரசியல், மதவியல், அழகியல் அல்லது மெய்யியல் – ஒரே சொல்லில் சொல்வதானால் கருத்தியல் வடிவங்களுக்கும் இடையில் எப்போதும் பாகுபடுத்தி அறிவது அவசியமாகிறது.

ஒரு சமுதாய அமைப்பானது அது இடம் கொடுக்கும் உற்பத்திச் சக்திகள் அனைத்தும் முழு வளர்ச்சி அடையும் முன்பாக ஒருபோதும் மடிவதில்லை. அதுபோலவே, பழைய சமுதாயத்தின் கர்ப்பத்திற்குள்ளேயே புதிய – உயர்ந்த உற்பத்தி உறவுகளுக்கு அடிப்படையான பொருள்வகை



*கார்ல் மார்க்ஸ்*

நிலைமைகள் முதிர்ச்சி காணாதவரை அவ்வுறவுகள் ஒருபோதும் தோன்றுவதில்லை.

எனவே மனித குலம் எப்போதும் தன்னால் தீர்க்க முடிகிற விதமான சிக்கல்களை மட்டுமே தனக்குத் தானே உருவாக்கிக் கொள்கிறது. ஏனெனில் சிக்கலைத் தீர்ப்பதற்கான பொருள்வகை நிலைமைகள் ஏற்கெனவே நிலவும்போது மட்டுமே, அல்லது குறைந்தது அவை உருவாகும் நிகழ்முறையில் இருக்கிறபோது மட்டுமே, சிக்கல் தோன்றுகிறது என்பதைக் கவனமாகப் பார்ப்போமானால், எப்போதும் நாம் கண்டு கொள்வோம்.

பொதுவாக, சுருக்கமாகச் சொன்னால் ஆசிய பண்டைய நிலப்பிரபுத்துவ – நவீன முதலாளித்துவ உற்பத்தி முறைகள் என்பன சமுதாயத்தின் பொருளாதார அமைப்பில் அடுத்தடுத்து வந்த கட்டங்களைக் குறித்துக் காட்ட முடியும். எனவே இந்த முதலாளித்துவ சமூக அமைப்புடன் மனித சமுதாயத்தின் வரலாற்றுக்கு முந்திய காலம் முடிவுக்கு வருகிறது."

*(கார்ல் மார்க்ஸ் தனது 'அரசியல் பொருதாரத்துக்கான விமர்சனம்'* **– Critique of Political Economy** *என்ற நூலுக்கு 1859இல் எழுதியுள்ள முன்னுரையின் முக்கிய பகுதியே மேலே தரப்பட்டுள்ளது)*

முன்பக்கத்தொடர்ச்சி...
அந்த நாடுகளின் உதவியைப் பெற முடியாத நிலையில் இருப்பார். அப்பொழுது அவரை வலிந்து போருக்கு இழுத்து, சுலபமாக வெற்றியீட்டி, தமது தனித் தமிழ் ஈழக்கனவை நனவாக்கிவிடலாம் என கற்பனைக் கோட்டை கட்டினர்.

ஆனால் பலரும் சொல்வது போல, ராஜபக்ஸ நடைமுறையிலும் தந்திரங்களிலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவையும், ஆர்.பிரேமதாசவையும் கொண்ட, 'ரூ இன் வன்' என்பதைப் புலிகள் அறிந்திருக்காததுடன், ராஜபக்ஸவுக்கு ஆதரவாக மேற்குலகம் வராவிட்டாலும், புலிகளுக்கெதிரான தனது சொந்த வேலைத்திட்டம் காரணமாக இந்தியா ராஜபக்ஸவுக்கு உதவ வரும் என்பதையும் மறந்துவிட்டனர். அதுவே அவர்களது அழிவுக்குக் காரணமாயிற்று.

ஆனால் எது எப்படியிருப்பினும், ஒரு பாசிஸ இயக்கம் என்ற வகையிலும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதை ஒருபோதும் ஏற்காதவர்கள் என்ற வகையிலும், ராஜபக்ஸ அரசாங்கம் புலிகளை ஒழித்துக் கட்டியதை, ஜனநாயகத்தையும் நாட்டையும் நேசித்த தமிழ் மக்களும் மனதார வரவேற்றனர் என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையாகும்.

ஆனால் அதற்குப் பின்னர், அதாவது போர் முடிவுற்ற பின்னர், ராஜபக்ஸ அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்தான், தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக உள்ளன. போர் முடிவடைவதற்கு முன்னரும், முடிவடைந்த உடனும், 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால்கூடச் சென்று தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்றவர், இப்பொழுது பல்வேறு சாக்குப் போக்குகளைச் சொல்லி அதைத் தட்டிக் கழித்து வருகிறார். அவரது இந்த பின்னடிப்பு எவ்வகையிலேனும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

தமிழ் மக்கள் கேட்பது எந்தவொரு பிரத்தியேகமான விடயங்களையும் அல்ல. நாட்டின் அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை எல்லா மாகாணசபைகளுக்கும் வழங்கும்படியே அவர்கள் கோருகிறார்கள். அப்படி வழங்கினால், அது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் கணிசமான ஒரு தீர்வாக அமையும் என்பதுதான், பொதுவாக நாட்டில் ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் விரும்பும் அனைவரினதும் ஏகோபித்த கருத்தாகும்.

ஆனால் ஜனாதிபதி இந்த குறைந்தபட்ச தீர்வைத்தன்னும் நடைமுறைப்படுத்தத் தயங்குகிறார். அதுமாத்திரமல்லாமல், அவரது அரசில் பங்காளிகளாக இருக்கும் அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவாக்க போன்றவர்களின் கட்சிகள் வெளிப்படையாகவே தமிழ் மக்களுக்கெதிராகச் செயற்படுகிறார்கள். ஜனாதிபதியின் தம்பியும் பாதுகாப்பு அமைச்சு செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஸவும் ஏறத்தாழ இதே மாதிரியான கருத்துக்களையே கொண்டிருப்பது தெரிகிறது. இவர்களது நிலைப்பாடுகளின் இந்தப் பின்னணியில், ஜனாதிபதி ராஜபக்ஸவும் தீர்வுகள் எதையும் நடைமுறைப்படுத்த மறுத்து வருவது சந்தேகத்தையே உண்டு பண்ணுகிறது.

இது தவிர, 'பொதுபல சேனா' என்ற புதிய சிங்கள இனவாத அமைப்பொன்று முஸ்லீம் மக்களுக்கெதிரான பிரச்சாரங்களையும், தாக்குதல்களையும் செய்து வருகிறது. இந்த இயக்கத்துடனும் அரசாங்கத்தின் மிக உயரிய பதவியில் உள்ள சிலருக்கு நெருக்கமான தொடர்புகள் உள்ளதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த இயக்கம் செய்து வரும் வேலைகள் நாட்டில் இனக் குரோதத்தைத் தூண்டுவனவாக இருந்த போதிலும், அரசாங்கம் அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறது.

சிறுபான்மை இனங்களுக்கெதிராக சிங்களப் பேரினவாத சக்திகள் செய்து வரும் இத்தகைய நடவடிக்கைகளைப் பார்த்தால், புலிகள் ஒழிக்கப்பட்டு யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டபடியால், இனி சிறுபான்மை இனங்கள் எந்தவொரு உரிமைக் கோரிக்கையையும் எழுப்பாமல், சாப்பிடுவதற்கு மட்டும் வாயைத் திறந்து கொண்டு வாழ வேண்டும் என, சிங்களப் பேரினவாதிகள் எண்ணுவது போலத் தெரிகிறது.

இது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கனடிய ஊடகமொன்றுக்குச் சொன்ன, 'இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்துவிட்டுப் போவதில் பிரச்சினையில்லை, ஆனால் உரிமை அது இது என்று கோரினால் அது தவறாகும்' என்ற கூற்றுக்கு ஒப்பானதாகும். அவர் இன்னமும் தனது சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டைக் கைவிடவில்லை என்பதற்குச் சான்றாக அண்மையில் 'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவை அரசாங்கம் நியமித்ததே தவறு' என்று திருவாய் மலர்ந்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் புலிகளின் முன்னாள் பேச்சாளராக இருந்து இராணுவத்திடம் சரணடைந்த தயா மாஸ்டர் வட மாகாணசபைத் தேர்தலில் அரசாங்க கட்சி சார்பில் போட்டியிடப் போகிறார் என்ற தகவல் வெளியானவுடன், பிரிவினைவாதிகளை அரசாங்கம் அரவணைக்கிறது என்ற குற்றச்சாட்டையும் அவர் முன் வைத்தார். (இந்த விமர்சனங்களால் பொன்சேகாவின் ஆப்த நண்பர்களான தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு ஏதாவது மனத்தாங்கல் ஏற்பட்டால் மன்னிக்கவும்!)

இது ஒருபுறமிருக்க, தெற்கில் சிங்களப் பேரினவாதிகளின் நடவடிக்கைகளுக்குச் சமமாக, வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய முன்னணி போன்ற தமிழ் இனவாத கட்சிகள் அரச விரோதத்தை மட்டுமின்றி, சிங்கள மக்கள் விரோத, முஸ்லீம் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றன. யுத்தம் முடிவுற்ற கையோடு, பல வருடங்களாகப் பார்க்காத வட பகுதியைப் பார்க்க வந்த சாதாரண சிங்கள

மக்களுக்கெதிராகத் தொடங்கிய இந்தப் பிரச்சாரம், இன்னமும் முடிந்த பாடாக இல்லை. தமிழகத்தில் இலங்கை பௌத்த பிக்குமாரையும், யாத்திரீகர்களையும், இலங்கையர்களுக்குச் சொந்தமான சொத்துக்களையும் தாக்கிய தமிழ் இன வெறியர்களின் நடவடிக்கைகளைக் குதூகலத்துடன் வரவேற்கும் இவர்கள், வாய்ப்புக் கிடைத்தால் வடக்கிற்கு வரும் சிங்கள மக்களைத் தாமும் தாக்கத் தயங்கமாட்டார்கள் என்பதுதான் இன்று அங்கிருக்கும் உண்மையான நிலைமை.

இந்தத் தமிழ் இனவாத சக்திகள் சிங்கள மக்களுக்கு எதிராக மட்டுமின்றி, முஸ்லீம் மக்களுக்கெதிராகவும் இனவாத அடிப்படையில் செயல்பட்டு வருகிறார்கள். அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லீம் மக்களைக் குடியேற்றுவதற்கு எடுத்த முயற்சிக்கு எதிராக, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டத்தையும், தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது இதன் அடிப்படையில்தான்.

இவ்வாறு நாட்டின் தெற்கிலும் வடக்கிலும் இனவாத - மதவாத நடவடிக்கைகள் வரவரத் தீவிரமடைந்து கொண்டு வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதாகத் தெரியவில்லை. அதுமாததிரமல்லாமல், அரசாங்கமே தான் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக, இவற்றைக் கண்டும் காணாமல் இருக்கிறதோ என்ற சந்தேகம் நாட்டு மக்களிடையே ஏற்பட்டு வருகிறது.

எடுத்ததிற்கெல்லாம், வெளிநாட்டு சக்திகளையும், எதிர்க்கட்சிகளையும் குற்றம் சாட்டுவதை விடுத்து, அரசாங்கம் தனது பக்கத்தில் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. முதலாவதாக, தெற்கிலும் வடக்கிலும் இனவாத - மதவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்போரை, அவர்கள் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக இருந்தாலும், தயவு தாட்சண்யமின்றி இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். உலகின் அதிபயங்கரம் வாய்ந்த புலிகளை ஒடுக்கிய அரசாங்கத்திற்கு, இந்த இனவாத - மதவாத கொசுக்களை நசுக்குவது ஒரு பெரிய விடயமல்ல.

இந்த விடயத்தைச் செய்யாது விட்டால், அரசாங்கத்தின் மடியில் கட்டிய வெடிகுண்டாக இவை மாறி, சரியான நேரத்தில் வெடித்து, அரசாங்கத்தையே சிதறடித்து விடும் என்பதை, நாம் சொல்லித்தான் அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. *

**"பூர்சுவா (முதலாளித்துவ) பத்திரிகைகள் பெரும் மூலதனத்தால் நடாத்தப்படுகின்றன. தொழிலாளர்களின் பத்திரிகைகள் அவர்கள் தமக்குள் திரட்டும் நிதியைக் கொண்டு நடாத்தப்படுகின்றன."**
**– லெனின்**

# நூலகம் பற்றி எழுதுங்கள்

வணக்கம்.

'நூலகம்' பற்றி நீங்கள் எழுதலாமே. தமிழர்களின் வாழ்வியலை, சரித்திரத்தை ஆவணப்படுத்தி வருகிறது நூலகம். தமிழர்களின் அரசியலுக்கு அப்பாற்பட்டு சமூக நலனுக்காக செயற்படும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம்.

நோர்வேஜியர்கள் அமெரிக்காவுக்கு 1800களில் புலம்பெயர்ந்த காலத்தின் சரித்திரத்தையும், ஆவணங்களையும் நோர்வேஜிய அரசின் எண்ணிம ஆவணக் காப்பகத்தில் (Digital Library) காட்சிப்படுத்தியிருக்கிறார்கள்.

நாம் புலம்பெயர்ந்த காலத்தின் சரித்திரத்தையும், ஆவணங்களையும் 200 வருடங்களின் பின் அல்ல, இன்று தேடினால் கிடைக்குமா?




1980களின் இறுதியில் வெளிவந்த புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், பாடல்கள், குறும் படங்கள், கலாச்சார நிகழ்வுகள் போன்றவை, இன்று எங்காவது ஓரிடத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் கிடைக்கும் சந்தர்ப்பம் இருக்கிறதா?

சரி, வேண்டாம், 1990களின் ஆவணங்கள் கிடைக்குமா? அதுவும் வேண்டாம், 2010ஆம் ஆண்டு ஆவணங்களாவது கிடைக்குமா?

நீங்கள் இதுபற்றி யோசித்தால் மகிழ்ச்சி.

தன்னார்வத் தொண்டர்களாக இயங்கும் எம்மவர்களால் நிர்வகிக்கப்படும் நூலக நிறுவனமானது, இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் சரித்திரத்தை, வாழ்வியலை ஆவணப்படுத்தி வருகிறது.

நூலக நிறுவனம் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களின் சரித்திரத்தையும், வாழ்வியலையும்கூட ஆவணப்படுத்தி வருகிறது.

எமது சரித்திரமும் இன்னும் 200 ஆண்டுகளின் பின் வாழலாம் என்னும் நம்பிக்கையிருக்கிறது.

மேலதிக செய்திகளுக்கு:
http://www.noolahamfoundation.org/wiki/index.php?title=blog

**தோழமையுடன்,**
**சஞ்சயன்**

## போராளித் தோழர் பசுபதி காலமானார்!

புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகளிலும், தீண்டாமைக்கும் சாதி அமைப்புக்கும் எதிரான போராட்டங்களிலும் சங்கானைப் பகுதியில் தன் வாழ்நாள் முழுவதும், தீரத்துடனும் அர்ப்பணிப்புடனும் போராடிய தோழர் பசுபதி அவர்கள், தமது 84ஆவது வயதில் அண்மையில் காலமானார்.

1960களின் மத்தியில் வட பகுதியெங்கும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தால் சூறாவெளியென முன்னெடுக்கப்பட்ட ஆலயப் பிரவேச, தேநீர்க்கடைப் பிரவேச, பொது இடங்களில் சமத்துவத்துக்கான தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் தோழர் பசுபதி வகித்த பாத்திரம் முன்னுதாரணம் மிக்கதொன்றாகும்.

குறிப்பாக, சாதி வெறி மிக மோசமாகத் தலை விரித்தாடிய சங்கனைப் பகுதியில் தோழர் பசுபதி எப்பொழுதும் முன்னணிப் போராளியாக நின்று போராடினார். அதன் காரணமாக சாதி வெறியர்களினதும், சாதி வெறி பிடித்த தமிழ் பொலிஸாரினதும் கடுமையான தாக்குதலுக்கும், அடக்குமுறைக்கும் ஆளானபோதும், தோழர் பசுபதி சளைக்காது போராடினார். அவரது தலை வணங்காத போராட்டம் காரணமாக அவர் நீண்டகாலம் சிறை வாழ்க்கையையும் அனுபவிக்க நேர்ந்தது. சாதி வெறியர்களைப் பொறுத்தவரை, தோழர் பசுபதி எப்பொழுதும் அவர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவே திகழ்ந்தார்.

தோழர் பசுபதி அவர்களின் ஈடுசெய்ய முடியாத இழப்பையிட்டு 'வானவில்' தனது ஆழமான கவலையை வெளிப்படுத்துவதுடன், அவரை இழந்து கவலையில் வாடும் அன்னாரது குடும்பத்தினர்க்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## கனடா வெளியேறியது!

பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐ.நா மன்ற மாநாட்டிலிருந்து (United Nations Convention to Combat Desertification) கனடா அண்மையில் வெளியேறியுள்ளது. இவ்வாறு வெளியேறிய உலகிலுள்ள ஒரேயொரு நாடு கனடாதான்!

இந்த அமைப்பு கூடுதலான நேரத்தைக் கூட்டங்கள் நடாத்துவதற்குச் செலவிடுவதும், குறைந்த அளவே நடைமுறை வேலைகளுக்குச் செலவிடுவதும்தான், கனடா அதிலிருந்து விலகியதற்கான காரணம் என கனடிய அரசு தெரிவித்துள்ளது.

## 'வானவில்' இதழை அஞ்சலில் பெறுவதற்கு

**'வானவில்'** இதழை கனடாவிலும் வேறு நாடுகளிலும் உள்ள சிலர் தபால் செலவு மட்டும் செலுத்தி மாதந்தோறும் இலவசமாகப் பெற்று வருகின்றனர். மேலும் சிலர் அவ்வாறு பெறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளா. அவ்வாறு பெற விரும்பும் கனடாவிலும், ஏனைய நாடுகளிலும் உள்ள வாசகர்கள் தபால் செலவை மட்டும் செலுத்தினால், பிரதிகள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். அத்துடன் மின்னஞ்சல் பிரதிகளைப் பெற விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
அனைத்துத் தேவைகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

**வானவில் நிர்வாகம்**

### வாசகர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**'வானவில்' வாசகர்கள்** அனைவருக்கும் மலர்ந்துள்ள தமிழ் – சிங்கள புத்தாண்டையொட்டி, எமது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**ஆசிரியர் குழு**

## கனடாவில் பண வீக்கத்தை விட கல்விக் கட்டணம் அதிகரித்துள்ளது!

கனடாவில் இன்று பிறக்கின்ற ஒரு குழந்தை தனது பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்காக மேலதிகமாக 140,000 டொலர்களை செலவிட வேண்டியுள்ளதாக, மொன்றியல் வங்கியின் புதிய அறிக்கையொன்று கூறுகிறது.

தற்போது பணவீக்க அதிகரிப்பு வேகத்தைவிட படிப்புக் கட்டணங்கள் அதிகமாக உள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது. 1990களின் ஆரம்பத்தில் பட்டப்படிப்புக் கட்டணம் சராசரியாக 1,464 டொலர்களாக இருந்தது. ஆனால் இன்று அது 5,581 டொலர்களாக அதிகரித்துள்ளது எனவும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. அதன்படி 2012இல் பண வீக்கம் 1.3 வீதமாக இருக்கையில், கல்விக் கட்டணம் 4.3 வீதமாக உள்ளது.

கனடிய பல்கலைக்கழகப் பட்டதாரிகள் ஏற்கெனவே சராசரியாக 27,000 டொலர்கள் கடனுடன் போராடி வருவதாக, கனடிய மாணவர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இப்பொழுது 4 வருட பட்டப்படிப்புக்கு 60,000 டொலர்கள் செலவாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: **Toronto Star**